# 76. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழில் கற்பனை

முனைவர் ம. கீதா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்,
கோவை-641043.

கலைகள் அனைத்திற்கும் கற்பனை அடிப்படையானது கற்பனைக்கு அழகைத் தருவது உணர்ச்சி. மனம் அழகில் ஈடுபடுத்துமிடத்துப் பிறக்கும் உணர்வு வெளிப்பாடே கற்பனை எனலாம். எனவே இது அழகியல் உத்திகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. கவிஞன் தான் கண்ட பல்வேறு பொருள்களைப் பற்றியோ, அனுபவித்த பல்வேறு உணர்ச்சிகளைப் பற்றியோ கூறுவது மட்டும் கவிதை ஆகிவிட முடியாது. அவற்றைக் கற்பனையில் குழைத்துச் சொல்லோவியங்களாக்கும் போது கவிதை பொலிவு பெறுகிறது. அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளைக் கூட கற்பனை என்னும் தூரிகையால் அழகுபடுத்தி அழியாத காட்சிகள் ஆக்கிவிடுகின்றான் கவிஞன். எனவே கற்பனையின் வெளிப்பாடு கவிதை என்றும், எதனையும் கூர்ந்து நோக்கும் அறிவுத் திறனும், நோக்கியவற்றை விரித்துரைக்கும் மொழியாற்றலும் கற்பனைக்கு இன்றியமையாதவை என்றும் கூறலாம். அவ்வகையில் சிவ நெறிச் செல்வராகிய குமரகுருபரர் பாடல்களில் மிளிரும் கற்பனைகள் எண்ணிலடங்காதவை. உலகியல் நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் கூறும் கற்பனை ஒன்று. உள்ளதைக் கொண்டு தெரியாத ஒன்றை விளக்க வந்த கற்பனை மற்றொன்று. இவ்வாறு பல்வேறு வகையான கற்பனைகளை இலக்கிய நயத்தோடு எடுத்தாண்டுள்ளார் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.

## கற்பனை விளக்கம்

இலக்கியக் கூறுகளில் ஒன்று கற்பனை. இக்கற்பனை திறனாய்வாளர் உள்ளத்தில் பல்வேறு வகையாக வெளிப்படுகின்றது. கற்பனை, கவிதையைச் சிறப்புறச் செய்வதுடன் கவிஞனை இனங்காட்டுவதாக அமைகின்றது.

கற்பனை என்ற சொல்லுக்கு கல்வி, போதனை, சங்கற்பம், கட்டளை, காரிய ஏற்பாடு, இல்லதைச் சுட்டி சொல்லுகை, வருணனை,

கபடம், அத்தியாசம் (மாயை) என ஒன்பது பொருள்களைத் தருகின்றது தமிழ்ப் பேரகராதி. தமிழின் பழமையான இலக்கண இலக்கிய நூல்களில் கற்பனை பற்றிய இலக்கணமோ, விளக்கங்களோ இல்லை. கற்பனை என்ற சொல் தொல்காப்பியத்திலோ, சங்க இலக்கியம், சங்கம் மருவிய இலக்கியங்கள் ஆகியவற்றிலோ காணப்பெறவில்லை. கற்பனை என்ற சொல் முதன்முதலில் திருமூலர் பாடலில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை,

*'கற்பனையற்றுக் கனல் வழியே சென்று'*

*– (திருமந்திரம் - பாடல் - 608)*

*'தற்பரன் கற்பனை யாருஞ் சராசரத்'*

*(திருமந்திரம் - பாடல் - 153)*

*'கழிந்த கற்பனை நாளும் குறுகி'*

*(திருமந்திரம் - பாடல் - 118)*

என்னும் அடிகளின் வழி அறியமுடிகின்றது.

பக்தி இலக்கியமாகிய சுந்தரர் தேவாரத்தில் 'கற்பனை கற்பித்த கடவுளர்' என்று இச்சொல் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். எனவே பக்தி இலக்கிய காலமாகிய இடைக்காலத்தில்தான் வழக்காற்றில் வந்ததாக அறியமுடிகின்றது. அதற்குப் பிற்பட்ட நூல்களிலும் அச்சொல் காணப்படுகின்றது. தாயுமானவர், 'கற்பனையாகப் பாடுகின்றேன்' என்று குறிப்பிட்டு 'இல்லாததை இருப்பதாகச் சொல்கிறேன்' என்ற பொருளில் விளக்குகிறார். இராமலிங்க அடிகளாரும் கற்பனை என்னும் சொல்லை, இன்று நாம் பெருவழக்காகப் பயன்படுத்தும் பொருளில் வழங்கியுள்ளார் என்பதை,

*"கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும்*
*கண்மூடி வழக்கம் எலாம் மண்மூடிப் போக"*

*(திருவருட்பா, பா-3768)*

என்ற வரிகளின் மூலம் உணர முடிகின்றது. இவ்வாறு தொடர்ந்து கற்பனை என்னும் சொல் கற்பித்தல், அறிவு, நினைவு, சிந்தனை, பழைய எண்ணம் என்ற பொருள்களிலேயே இலக்கியங்களில் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது.

## கற்பனையின் பயன்

கவிஞன் அழகினால் வசப்படுபவன். அழகு இயற்கை உலகிலும் உண்டு. மனிதர் நடமாடும் செயற்கை உலகிலும் உண்டு. இயற்கையை மனிதன் அனுபவிக்கும் அனுபவத்திலும் உண்டு. இம்மூவகை அழகிலும் ஈடுபட்டுத் தன்னை மறந்து இன்ப அனுபவ உலகில் வாழக் கூடியவன் கவிஞன். மறந்த நிலையிலிருந்து விடுபட்டு மீண்டும் விழிப்பு நிலைக்கு வந்தவுடன், அந்த அழகையும், அனுபவத்தையும் ஒருமுகப்படுத்தி சொல்லோவியமாகப் படைத்துக் காட்டும் போது அவனிடம் இயல்பாக அமைந்துள்ள இயல்பூக்க கலையுணர்வு கற்பனைத் திறனாய் இயங்கிப் பயனை விளைவிக்கின்றது. அந்தக் கற்பனைத் திறனை மூன்றாகப் பிரிக்கலாம். அவை படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்துவிளக்கக் கற்பனை என்பனவாகும்.

## படைப்புக் கற்பனை

ஓர் அழகின்பக் காட்சியைக் கண்டு அதனை மறவாது வேறோர் இடத்தில் மற்றோர் அழகிய பொருளைக் காணுமிடத்து இருவகை அழகுணர்ச்சியையும் ஒன்றாக்கிப் புதியதோர் அழகின்பக் காட்சியைப் படைத்துக் காட்டுவது படைப்புக் கற்பனையாகும். குமரகுருபரர் தாம் செல்லுமிடங்களில் காணும் பொருள்களின் அழகை முழுமையாகவும் தெளிவாகவும் கண்டு மனதில் நிறுத்துகின்றார். அந்த அழகை மறவாறு போற்றி வேறோர் இடத்தே மற்றொரு பொருளின் அழகைக் காணும் போது இருவகை அழகுணர்ச்சியையும் ஒன்றாக்கிப் புதியதோர் அழகின்ப உலகத்தைப் படைக்கின்ற தன்மையைக் காணமுடிகிறது.

## மருத நிலச் சிறுமியர் விளையாட்டு

சிறுவர், சிறுமியர் ஆற்றுமணலில் வீடு கட்டி விளையாடுவது பழக்கமாக உள்ளது. அதிலும் குறிப்பாகப் பெண்கள் அதிகமாக சிறுவீடு கட்டி விளையாடுவர். இதனால் தான் சிறுவீட்டுப்பொங்கல் என்று காணும் பொங்கலுக்குப் பெயரிட்டனர் என்று கூடக் கொள்ளலாம். குமரகுருபரர் பிறந்த ஊரான திருவைகுண்டம் மருதநிலம் சூழ்ந்த நெல்லை மாவட்டத்தில் அமைந்துள்ளது. அவரது ஊரின் அருகிலேயே கடல்வளம்மிக்க திருச்செந்தூர் உள்ளது. மருதநிலத்தையும் நெய்தல் நிலத்தையும் பார்த்துப் பார்த்து அனுபவித்த நிலையில் இருநிலப்

பொருட்களையும் இணைத்த கற்பனை அவர் உள்ளத்தில் முகிழ்த்தது என்றே எண்ணத் தோன்றுகிறது. சிறுமியர் வீடுகட்டி விளையாடியதை,

'விளையாட் டயரு மணற்சிற்றில்
வீட்டுக் குடிபுக் கோட்டியிருள்
சீக்குஞ் சுடர்காங் கழன்மணியின்
செந்தீ மடுத்த சூட்டடுப்பிற்
செழுந்தாட் பவளத் துவரடுக்கித்
தெளிக்கு நறுத்தண் டேறலுலை
வாக்குங் குடக்கூன் குழிசியிலம்
மதுவார்த் தரித்த நித்திலத்தின்
வல்சி புகட்டி வடித்தெடுத்து
வயன்மா மகளிர் குழாஞ்சிறுசோறு''

(பி.தால்,பா-2)

என்ற பாடலின் மூலம் காணலாம். மருதநிலத்துச் சிறுமியர் மணலில் சிறுவீடு கட்டி, மாணிக்கமாகிய தீயை அடுப்பில் வைத்து, பவளக்கொடிகளை விறகாக அடுக்கி, வலம்புரிச் சங்கில் தேனை ஊற்றி உலை வைத்து, முத்தாகிய அரிசியைப் போட்டுச் சிறுசோறாக்கி விளையாடினர் என்பது இதன் பொருளாகும். மருதநிலச் சிறுமியர் விளையாட்டிற்கு நெய்தல் நிலப் பொருட்களைப் பயன்படுத்தியதாகக் கற்பனை செய்கிறார் குமரகுருபரர்.

## இயைபுக் கற்பனை

காட்சி, உணர்ச்சி, கருத்து முதலியவற்றால் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுபோலத் தெரிவனவாய் தன் மனத்தில் பட்டதை ஒன்றோடு ஒன்று இயைய வைத்து அழகுபடக் காட்டுவது இயைபுக் கற்பனையாகும். இருவேறு உணர்ச்சிகளை இயைபுபடுத்தி அமைக்கும் கற்பனை இயைபுக் கற்பனை என்றும் கூறுவர்.

## வான்கங்கையுடன் வையை பந்தாடுதல்

குமரகுருபரர் இறைவனும் இறைவியும் கோயில் கொண்டுள்ள இடங்களையெல்லாம் பார்த்துத் தரிசித்து வரும்போது மதுரை மீனாட்சியையும் தரிசிக்கிறார். மதுரை மாநகரம் வையையாற்றினால் வளம் கொழிக்கக் கூடியது. அந்த ஆறு பெருக்கெடுத்து ஓடும்போது எழும் அலைகள் முத்துக்களையும் மணிகளையும் வீசுகிறது. அக்காட்சி

பெண்ணாகிய வையை பந்தும் கழங்கும் எடுத்து என்னுடன் விளையாட வா என்று வானுலகிலுள்ள கங்கையை அழைப்பதுபோல இருந்தது என்று கற்பனை செய்கிறார். இதை,

*'நெளிக்குந் தரங்கப் பெருங்கங்கை யுடனொட்டி*
*நித்திலப் பந்தாடவும்*
*நிரைமணித் திரளின் கழங்காட வுந்தன்*
*நெடுந்திரைக் கையெடுத்து*
*விளிக்கும் பெருந்தண் டுறைக்கடவுள் வைகைநெடு*
*வெள்ள நீராடியருளே''* *(மீ.பி. நீராடல், பா-5)*

என்னும் பாடல் வழி அறிய முடிகின்றது. விளையாட்டுக்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமின்றி உடல்நலம், மனநலம், மனமகிழ்ச்சி போன்றவற்றிற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. இலக்கியங்களில் மகளிர் விளையாட்டுகளாகிய ஊசல், நீராடல். கழங்கு, பந்தாட்டம், திருப்பூவல்லி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. அக்காலப் புலவர்கள் இறைவனின் பக்தி சிறப்பைக் கூற பெண்களின் விளையாட்டைத் தேர்ந்தெடுத்ததாகவும் அவர்கள் ஒவ்வொரு தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடும் போது அங்குள்ள மகளிர் விளையாடும் விளையாட்டைப் பார்த்த சூழல் மனதிற்கு வர அந்த விளையாட்டின் மூலமே இறைவனின் பக்தி திறத்தை வெளிப்படுத்தியதாகவும், இலக்கியங்கள் கூறுகின்றன. இதைப் போலவே குமரகுருபரரும் மகளிரின் பந்தாட்டம், கழங்காட்டம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கற்பனை செய்திருப்பதை உணர முடிகின்றது.

## கருத்து விளக்கக் கற்பனை

இயற்கையாக நடக்கும் ஒன்றினிடத்துப் புலவர் தாம் நினைத்த கருத்து ஒன்றை ஏற்றி வைத்துக் கற்பனை செய்து பாடுவது கருத்து விளக்க கற்பனையாகும். குமரகுருபரர் இக்கற்பனையைத் தமது பாடல்களில் அதிகமாகக் கையாண்டுள்ளார்.

## உலக வடிவினள் மீனாட்சி

நான்கு மறைகளும் உலகத்துப் பொருட்கள் அனைத்தும் இறைவியின் வடிவமே என்று எடுத்துச் சொல்லுகின்றன. வேதங்களின் கூற்று உண்மை என்பதை உணர்த்துவது போன்ற ஒரு காட்சியை குமரகுருபரர் விளக்குகின்றார். பவளக் கொடியும் முத்துக்களும் நிறைந்த

குளத்தில் தாமரையின் மீது வெள்ளை அன்னம் ஒன்று வீற்றிருந்தது. அக்குளத்தில் பசிய நிறமுடைய மீனாட்சியம்மை நீராடியபொழுது அவளது அழகிய பசுமை ஒளியால் பவளக் கொடி பச்சிளங்கொடியாகத் தோற்றமளிக்கின்றது. பருமையான முத்துக்கள் மரகத மணிகளாகத் தோற்றம் அளிக்கின்றன. நீர்த்துறையில் வாழும் அன்னங்கள் மயில்கள் போல் காட்சியளிக்கின்றன. வெவ்வேறு நிறங்கொண்ட பொருட்கள் அனைத்தும் இவ்வாறு அன்னையின் நிறத்தைப் பெற்று உலகத்துப் பொருட்கள் அனைத்தும் அன்னையின் உருவங்களே என வேதம் உரைக்கும் உண்மையினை வெளியிடுகின்றன. இந்த அரிய மறைபொருளை,

*"பண்ணாறு கிளைமொழிப் பாவைநின் றிருமேனி*
*பாசொளி விரிப்பவந்தன்*
*பவளக் கொடிக்காமர் பச்சிளங் கொடியதாய்ப்*
*பருமுத்த மரகதமாய்த்*
*தண்ணாறு மல்லற் றுறைச்சிறை யனங்களி*
*தழைக்குங் கலாமஞ்ஞையாய்ச்*
*சகலமு நின்றிருச் சொருபமென் றோலிடும்*
*சதுர்மறைப் பொருள் வெளியிட"*

*(மீ.பி.நீராடல்.பா-3)*

என்னும் பாடலடிகளின் மூலம் விளக்குகின்றார். இப்பாடலில் வண்ணமாற்று உத்தியைப் பின்பற்றி இக்கருத்து விளக்கக் கற்பனையை அமைத்துள்ளார். நாடக மேடையில் வண்ண விளக்கின் ஒளியில் பொருட்கள் நிறம் மாறுதலைப் போன்று இக்காட்சியை அமைத்துள்ளார்.

தொகுப்புரை

தாமிரபரணி ஆற்றங்கரையில் பிறந்த குமரகுருபரர் மதிநுட்பத்தோடு நூலறிவும், இறையருளும் வாய்க்கப்பெற்றவர். இவர் ஒரு தெய்வம், ஒருமொழி, ஒருகலை, ஒருநாடு என்றும் வரையறையின்றிப் பல தெய்வங்களையும், பலமொழிக் கருத்துக்களையும், பலகலைச் செய்திகளையும், பலநாட்டு வருணனைகளையும், தம் கற்பனையில் படைத்துள்ளார். உள்ளுணர்வால் பெற்ற இறையனுபவத்தைப் புலனுணர்வாக மாற்றிக் கற்பனை செய்கிறார். ஒவ்வொரு நூலிலும் கற்பனை அதிக அளவில் மிளிர்வதைக் காணலாம். இவரது கற்பனையின் ஒவ்வொரு கூறிலும், உயரிய அறிவும், ஓங்கிய உண்மையும் பின்னணியாக விளங்குவதை அறிய முடிகின்றது.